மேல்முறையீடு வழக்கு எண். 25/2022

நாள் : 23.01.2025

பி.வா.சா. : 3

பெயர் : ராஜேஷ்குமார்

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி**

மேற்படி மீன்வளர்ப்பு திட்டத்தை பற்றிய பொதுஅறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் இந்த திட்டத்திற்கு விவசாயிகளின் list கையில் இருந்ததாலும் Target ஒரே ஒரு Fish pond என்பதாலும் பொது அறிவிப்பு வெளியிடப்படவில்லை. இந்த திட்டத்திற்காக எத்தனை விவசாயிகள் விருப்பம் தெரிவித்தார்கள் என்றால் 4 பேர். அதற்கான பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த பதிவேடு ஆவணம் Ex.X2 அந்த பதிவேட்டின்படி 2018-2019ஆண்டிற்கான மேற்படி திட்டத்திற்கு சிவக்குமாரும் விருப்பம் தெரிவித்துள்ளார் என்றால் சரி. அந்த விருப்பத்தின்பேரில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் மற்றும் மீன்வளத்துறை ஆய்வாளர் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள் என்றால் சரி. அப்படி பார்வையிடும்போது ஏற்கனவே அங்கு குளம் வெட்டப்பட்டிருந்தது. மேற்படி விருப்பபதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட மேற்படி திட்டத்தில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்களின் பட்டியல் சென்னையில் உள்ள மீன்வளத்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. அதற்கான ஆவணம் எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். **அதற்கான ஜெராக்ஸ் Ex.X3 ஆகும்.** அப்படி எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் **ந.க. எண். 1572 இ 2015, நாள் 14.08.2018.** அந்த விருப்பப்பட்டியல் நிலங்களை ஆய்வு செய்த பின்பு அனுப்புவோமா அல்லது அதற்கு முன்பே அனுப்புவோமா என்றால் பார்வையிடுவதற்கு முன்பே அனுப்புவோம். எத்தனை நபர்களின் பெயர் விருப்பப்பட்டியலில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் இருவரின் பெயர்கள்.

அவர்கள் பெயர் என்ன என்றால் கோவிந்தராஜா, த/பெ. அகோரம், ராமலிங்கம், த/பெ. சாமிநாதன். விருப்பபதிவேட்டின் படி இன்னும் இரண்டு பேர் சிவக்குமார் த/பெ. சாமிநாதன், மற்றும் ஜெயலட்சுமி, க/பெ. பாலசுந்தரம் ஆகியோரின் பெயரும் உள்ளது என்றால் சரி. 14.08.2018 அன்று அனுப்பியதாக சொல்லும் விருப்பப்பட்டியலில் மேற்படி இரண்டு நபர்களின் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரி. அப்படி சென்னை மீன்வளத்துறை இயக்குநரகத்திற்கு அனுப்பிய இரண்டு நபர்களும் இந்த திட்டத்தின்படி பயனாளிகள் இல்லை என்றால் சரி. அப்படியிருக்கும்போது சிவக்குமார் த/பெ. சாமிநாதன், மற்றும் ஜெயலட்சுமி, க/பெ. பாலசுந்தரம் ஆகியோரின் பெயரை பரிந்துரைத்து சென்னை மீன்வளத்துறை இயக்குநரகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. மீதமுள்ள இரண்டு பேரின் நிலங்களை பார்வையிட்டதில் ஜெயலட்சுமி, க/பெ. பாலசுந்தரம் என்பவரின் நிலம் மீன் குளம் வெட்டுவதற்கு உகந்ததாக இருந்ததால் அவருடைய பெயரை சென்னை மீன்வளத்துறை இயக்குநரகத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்காமல் தேர்வு செய்து பணி தொடங்கப்பட்டது. 2018 – 2019ஆண்டிற்கான பதிவேட்டின்படி உத்தேச பட்டியலில் அனுப்பப்பட்ட இரண்டு விவசாயிகளும் இந்த திட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்று சீர்காழி, உதவி இயக்குநர் அந்த பதிவேட்டில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் அவர்கள் இருவரும் விருப்பம் தெரிவித்த தேதி 14.08.2018 அதன்பிறகு உதவி இயக்குநர் அந்த நிலங்களை பார்வையிட்டபோது அந்த நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அதனால் அவர்கள் மீன் குளம் வெட்ட விருப்பம் தெரிவிக்காததால் 05.03.2019 அன்று மேற்படி தகவலை மேற்குறிப்பு செய்துள்ளார். நிலத்தை பார்வையிட்ட பிறகு அந்த நிலம் மீன் வளர்ப்பிற்கு உகந்ததாக இருந்தால் தான் அவர்களிடமிருந்து விண்ணப்பம்

வாங்குவோம். 2018 – 2019 ஆண்டிற்கான **Earthen Fish Seed rearing and culture farm என்ற திட்டத்திற்கு ஒரு பயனாளி தான் என்பதற்கு உத்தரவு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான ஜெராக்ஸ் சான்று நகல் Ex.X4** ஆகும். அக்வா கல்சர் இன் பார்ம் பான்ட் என்ற திட்டத்தின் கீழ் 40 பயனாளிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. Fishing implement என்ற திட்டத்தின் கீழ் 5 பயனாளிகள் என்றால் சரி. மேற்படி ஒப்பந்தங்களை நிறைவேற்றுபவர் திருவாரூர் உதவி இயக்குநர். திருவாரூர் உதவி இயக்குநருக்கும் ஒப்பந்தகாரர் சேகருக்கும் தான் மீன் வளர்ப்பு குளம் வெட்டுவதற்கு ஒப்பந்தம் என்றால் சரி. அவ்வாறு ஏற்பட்ட ஒப்பந்தப்படி திருவாரூர் உதவி இயக்குநர் சொன்னால்தான் சேகர் வேலை செய்வார் என்றால் சரி. திருவாரூர் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து சேகர் செய்யும் வேலைகளான இயந்திரம் மூலமாக குளம் வெட்டுதல், இயந்திரத்தை ஏற்றிவரும் செலவிற்கான பணம், மீன்பிடி வலை, ஆக்ஸிஜன் சிலிண்டர், கண்டிசன் டேங்க், ஆகியவற்றிற்கான மானியம் ஒப்பந்தகாரர் சேகர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். விவசாயிக்கு எந்த மானியமும் அளிக்கப்படமாட்டாது என்றால் சரி. விவசாயிடமிருந்து ஒப்பந்தகாரர் சேகர் எந்த தொகையும் வாங்க முடியாது என்றால் சரி. மேல்முறையீட்டாளர் நிலத்தில் எங்கள் அலுவலகத்திலிருந்து ஒப்பந்தகாரர் மீன்வளர்ப்பு குளம் சேகர் மூலம் வெட்டப்பட்டது என்றாலும் அதற்கான ஆவணங்களை நான் எடுத்துவரவில்லை என்றால் சரியல்ல. அவர் பயனாளி கிடையாது. எனது மேல் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு அவர்களை காப்பாற்றுவதற்கான அந்த ஆவணங்களை எடுத்துவரவில்லை என்றால் சரியல்ல. அவர் பயனாளி இல்லை என்பதால் அதற்கான ஆவணம் எதுவும் இல்லை. இல்லாத ஆவணத்தை எப்படி எடுத்துவர முடியும்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை எனவே குறுக்கு விசாரணை இல்லை.

ஒ.ப. 23/1/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

23/1/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

23-1-25